**வல்வெட்டித்துறை நகர சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 26 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வல்வெட்டித்துறை நகரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்கீட்டு கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | பதில் தரப்படவில்லை. |

### 1.4 இணக்கமின்மைகள்

#### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) நகரசபை ஒழுங்கு விதி அத்தியாயம் (III) பிரிவு 54 (3) | ரூபா 4,538,640 பெறுமதியான ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு | உரிய நகர சபை ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக | இனிவரும் காலங்களில் இது தொடர்பான நடவடிக்கைகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தவிசாளரினால் பற்றாணைச் சீட்டு வழங்கப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | மேற்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலில குடியரசின் அரசாங்கத்தின் நிதிப்பிரமாணம் இலக்கம் 571 | ரூபா 63,877 பெறுமதியான ஒப்பந்தகாரருக்கு மீளளிக்கப்பட வேண்டிய பிடிபணம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிதி ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மிகுதித்தொகை ரூபா 63,877 செலுத்தப்பட வேண்டியுள்ளது. |
| (இ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் - 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | சபையின் 02 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உரிய சுற்று நிருபத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | வாகனம் பழுதடைந்துள்ளமை யினால் எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பு செய்யமுடியவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,733,352 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,127,614 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,406,500 | - | 1,727,713 | 4,538,640 | 790,000 | - | 764,485 | 3,747,336 |
| வாடகைகள் | 2,873,850 | - | 3,700,781 | 47,000 | 5,682,000 | - | 3,570,082 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 734,500 | - | 716,355 | - | 738,500 | - | 839,645 | - |
| ஏனைய வருமானம் | 5,036,2500 | - | 47,264,939 | 11,617,089 | 47,380,500 | - | 50,115,652 | - |
| | **56,377,350** | **-** | **53,765,238** | **16,202,729** | **54,591,000** | **-** | **55,289,864** | **3,747,336** |

* பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டுகள் உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 55,289,864 ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 53,765,238ஆக உள்ளமையால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 1,524,626 இனால் குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டிருந்தது. | பட்டியலப்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட முத்திரைத்தீர்வைகள் கிடைக்கப்பெறும் போது வருமானத்துடன் சேர்த்துக்கொள்ளப்படும். |
| (ஆ) | சபையினால் கடந்த 05 வருடங்களாக வருமானம் பட்டியல் இடப்படாமையினால் குறித்த வருமானங்கள் தொடர்பான நிலுவையினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதுள்ளது. | சபையின் வருமானங்கள் பட்டியலிடப்படல் வேண்டும். | அடுத்துவரும் ஆண்டுகளில் அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். |

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் ஆதனவரி நிலுவை ரூபா 4,538,640 பெறுமதியினை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் உரிய காலத்தில் அறவிடப்படவேண்டும். | மிகுதித்தொகை ரூபா 3,738,097 அறவீடு செய்யப்பட வேண்டியுள்ளது. |

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,436,614 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை தீர்வை ரூபா 2,309,206 பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவையினை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிடைக்க வேண்டிய தண்டப்பணம் யாவும் திறைசேரிக்கு கிடைக்கப்பெற்ற பின்னரே சபைகளுக்கு மீளளிப்புச் செய்யப்படும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகர சபை கட்டளைச் சட்டம் 4 பிரிவின் பிரகாரம் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நகர சபை கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் பிரகாரம்,10 தொடக்கம் 15 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் 05 விடயங்களுக்கு உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | 10 - 15 வரையான துணை விதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 10 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவேண்டும். | இனிவரும் காலங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கழிவுப் பொருட்கள் அகற்றுவதற்காக குறிப்பிட்ட பிரதேசம் தெரிவு செய்யப்பட்டு, கழிவுப் பொருட்கள் தரம் பிரிக்காது ஒன்றாகவே குவிக்கப்பட்டு எரிக்கப்படுகின்றது. இதனால் சூழல் மாசடையும் நிலமை காணப்படுகின்றது. | திண்மக்கழிவகற்றல்கள் முறையான வகையில் தரம் பிரிக்கப்பட்டு சேகரிக்கப்படுவதனை உறுதிப்படுத்த வேண்டும். | சூழல் மாசடைவதனைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

(ஈ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவுகள் அகற்றுதல்தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | இது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 திகதி க. செ. போ/2018/16 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தியின் இலக்கை அடைவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவித்தலுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | இது தொடர்பாக வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 62,220,310 பெறுமதியான நிலையான வைப்பினை நகர அபிவிருத்தி நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது வட்டி வருமானத்தை உழைக்கும் நோக்கில் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்தன. | நிலையான வைப்புக்கள் பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட வேண்டும். | இது தொடர்பாக இனிவரும் காலங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) | சபையில் உள்ள 05 மயானங்களில் அதற்கான வரி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்தது. | சபையானது தமது வருமானங்களை உரியவாறு அறவிட வேண்டும். | கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 10 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளது. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 253,919 பெறுமதியான ஆதி கோவிலடி வீதி வேலைக்குரிய நிதி சபையினால் தீர்ப்பனவுகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்நிதியினை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,035,000 பெறுமதியான 02 வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் பெயருக்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நன்கொடையாக வழங்கப்பட்ட வாகனத்தின் பதிவுப்புத்தகம் காணப்படாமையினால் உரிமை மாற்றுவதில் தாமதம் உள்ளது. |

#### 3.5.2 விளைவற்ற சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பொதுமக்களுக்கு சிறப்பானதும் பயனுள்ளதுமான வேவையினை வழங்குவதற்காக ஒரு பொதுப்பூங்காவை அமைப்பதற்காக 28 யூன் 2013 சபைத் தீர்மானத்தின்படி குத்தகைக்கு பெறப்பட்ட காணியில் நாளது வரை பூங்கா அமைக்கப்படாததுடன் சபையினால் ரூபா 298,800 பெறுமதி குத்தகை கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. | சபையானது தமது நிதியினை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | முழுமையாக வேலை முடிவடைந்தவுடன் மக்களின் பாவனைக்கு விடப்படும். |
| (ஆ) | புதிய சந்தைக்கட்டிட தொகுதியில் A Block இல் 11 கடைகளும் திறந்த மண்டபமும் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்காமையினால் நகர நசபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. | சபையானது தமது சொத்துக்களை பயன்படுத்தி வினைத்திறனான முறையில் வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கேள்வி கோரப்பட்ட போதும் எவரும் விண்ணப்பித்திருக்கவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் ஆளுக்குரிய வரும்படிகள், பயணச்செலவுகள், மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பேணலும்,ஓய்வூதியங்கள், இளைப்பாற்று நயங்கள், பணிக்கொடைகள் போன்ற செலவினங்கள் சாதகமாகவும் வழங்கு பொருட்களும் தேவைப்பொருட்களும் மானியங்கள் உதவுதொகைகள், உதவிப்பணங்கள், ஏற்றியிறக்கல், தொடர்பிணைப்பு பயன்பாட்டுச்சேவை மற்றும் பிறசேவைகள்,செலவினம் பாதகமாகவும் காணப்படுகின்றன | பாதீடுகள் வினைத்திறனாக கட்டுப்பட்டு கருவிகளுக்கமைய திட்டமிடப்பட்டு தயாரிக்கப்படுதல் வேண்டும். | பாதீட்டுக்கும் உண்மைக்கும் இடையிலான வேறுபாடுகளைத தீர்க்க எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 4.2 தீர்க்கப்படாத அவதானிப்புக்கள் மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நகரசபை தொடர்பாக 24 ஒக்டோபர் 2016 ஆம் திகதி அன்று மாகாணப் பொதுக் கணக்குக்குழுவினால் விசாரணை செய்யப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் 2012, 2013 ஆகிய வருடங்களிற்கான கணக்காய்வு அறிக்கை தொடர்பான அவதானிப்புக்கள் தொடர்பாக நாளாதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண பொதுக்கணக்குக் குழுவினால் விசாரணை செய்யப்பட்ட 2012, 2013 ஆகிய வருடங்களிற்கான கணக்காய்வு அறிக்கை தொடர்பான அவதானிப்புக்களிற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய தொகையை அறவிடுவதற்கு ஆலோசனை பெறப்படுகிறது. |